# Report of Dowry Prohibition Rally




Boys and girls of Sacred Heart College(Autonomous), Tirupattur, Shift –II participated a rally against Dowry Prohibition in the remembrance of the Dowry prohibition Act 1961 along with District Administration. The district collector Mr. Baskara Pandiyan kicked off the rally by waving the flag on 19th January 2024. Around 130 students marched from the collector office through bus stand, court, Government hospital and ended in the collector office. Along with the students, there were participants from Women self-help group, Anganwadi workers, officials from the collector office and officials from all the department. The rally started at 10 am and ended at 11 am. They created awareness among the public to abolish dowry by shouting the slogan “punnagai iruka pon nagai etharku”





லயார்
திருமண தகவல் மையம்
தொடர்புக்கு : 9884391205

RNI.NO.TNTAM/2012/32432 MAKKALKOTTAI

# மக்கள்கோட்டை

தமிழ் காலை நாளிதழ்
www.makkalkottai.com
மக்கள் கோட்டை நாளிதழ்
Gmail:makkalkottai@gmail.com
MAKKALKOTTAI TAMIL DAILY

சென்னை மலர்-15 இதழ்-118 சனி-20.01.2024 தை-06 பக்கம்-4 விலை-ரூ.6/

லயார்
வேலை வாய்ப்பு தகவல் மையம்
தொடர்புக்கு : 9884391205

## திருப்பத்தூர் ஆட்சியர் அலுவலகத்தில் வரதட்சணை விழிப்புணர்வு பேரணி ஊர்வலத்தை கொடியசைத்து துவக்கி வைத்த மாவட்ட ஆட்சியர்



திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பாக பெண்களுக்கு எதிரான வரதட்சணை கொடுமை விழிப்புணர்வு பேரணி ஊர்வலம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மண்டல தேர்தல் அலுவலர் மதுமதி மற்றும் மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் ஆகியோர் இணைந்து விழிப்புணர்வு பேரணி ஊர்வலத்தை கொடி அசைத்து துவக்கி வைத்தனர். மாவட்டம் முழுவதும் உள்ள அங்கன்வாடி பணியாளர்கள் கல்லூரி மாணவ மாணவிகள் மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் என சுமார் 300க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்த வரதட்சணை விழிப்புணர்வு பேரணி ஊர்வலத்தில் வேண்டாம் வேண்டாம் வரதட்சணை வேண்டாம் சீதனம் வேண்டாம் சாதனை பெண்கள் போதும் புன்னகை இருக்கும் போது பொன் நகை எதற்கு கரம் பற்றி வருபவளிடம் வரதட்சணை கேட்கலாமா உள்ளிட்ட வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி கோஷங்கள் எழுப்பியவாறு பேருந்து நிலையம் நீதிமன்றம் தலைமை அரசு மருத்துவமனை வழியாக சென்று மீண்டும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை பேரணி ஊர்வலம் நிறைவு பெற்றது. இந்த பேரணியில் மாவட்ட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அலுவலர் விஜயலட்சுமி வருவாய் கோட்டாட்சியர் வளர்மதி உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

